**கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் - 2023**

-----------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், மொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.
எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களினுள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு கொள்கைகளிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்து இயங்கும் இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவம் நிறுவனத்தை கலைக்க நாடினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத போது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ந்து இயங்கும் அடிப்படையில் கணக்கு வைக்கும் மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சிளான செயற்பாட்டுடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக் கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நிறுவனத்தின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், நிறுவபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றி அமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களில உள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எதிர்வரும் 12 மாத காலத்தினுள் முதிர்வடையவுள்ள ரூபா 64,436,187 ஆன 02 நிலையான வைப்பு மீதிகள் மற்றும் ரூபா 6,220,300 ஆன திறைசேரி உண்டியல் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பித்துள்ளதால் நடைமுறையல்லாத சொத்துக்கள் ரூபா 70,656,487 இனால் கூடுதலாகவும் நடைமுறை சொத்துக்கள் அவ் அளவால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்பு மற்றும் திறைசேரி நிதியத்தை ஆண்டினுள் விற்பனை செய்ய அல்லது பயன்படுத்த வைத்துக் கொள்ளாததால் மற்றும் 2020 ஆண்டில் அரச கணக்காய்வு பரிந்துரையின் அடிப்படையில் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் சொத்துக்கள் வகைப்படுத்தி காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆண்டில் கொழும்பு பிரதேசத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 11.4 பர்சஸ் காணி மற்றும் கட்டிடத்திற்காக ரூபா 38,349,500 ஆன சுவீகரிப்பு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த ஆதனத்தை கணக்கீடு செய்யும் போது காணி மற்றும் கட்டிடத்தை வெவ்வேறாக கணக்கீ செய்து சுவீகரிக்கும் மொத்த செலவினத்தை கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்து வருடாந்த பெறுமானத் தேய்வு கணக்கிடப்பட்டிருந்தது | கொழும்பு அலுவலகத்திற்காக வீடு மற்றும் காணியை ஒரு அலகாக கொள்வனவு செய்ய பெறுகைகள் நடவடிக்கை மேற்கொண்டதனால் குறித்த பெறுமதியை கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்கள் சரியாக சொத்து வகுப்புகளின் கீழ் இனங்காணப்பட வேண்டும். |
| (இ) | கிரயம் ரூபா 148,248,756 ஆன 2295 ஆதன பொறிகள் மற்றும் உபகரண உருப்படிகள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்தாக காண்பித்திருந்ததுடன் அந்த சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்தை மீளாய்வு செய்து மீண்டும் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததால் நடைமுறையல்லாத சொத்துக்கள் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 பிரகாரம் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டு பெறுமதியின் மீது பெறுமானத் தேய்வு சீராக்கியதுடன் அந்த சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் குறித்த மீள்மதிப்பீட்டு பெறுமானங்களை புத்தகங்களிற்கு எடுப்பதென. | ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2020 ஆண்டிற்குரிய ரூபா 892,801 ஆன ஆராய்ச்சி படிகள் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் செலவினம் அப் பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சிகளிற்காக ஆராய்ச்சி படிகள் கோரப்பட்டுள்ளதுடன் 2023 ஆண்டில் ஆராய்ச்சி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் கொடுப்பனவு அவ்வாண்டில் செய்யப்பட்டுள்ளதென. | காலப் பகுதிக்குரிய செலவுகளை சரியாக இனங்காண வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் மாதத்திற்குரிய ரூபா 1,409,325 ஆன செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் கணக்கீடு | செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 1,409,325 தொகையை சரியாக கணக்கீடு செய்யாத தவறை சீராக்க நடவடிக்கை | செலுத்த வேண்டிய கணக்குகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படாததால் ஆண்டின் செலவினம் மற்றும் நடைமுறை சொத்துக்கள் அப் பெறுமானத்தால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எடுப்பதென. | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய ஆதன பொறிகள் மற்றும் உபகரண பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 840,223 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் நடைமுறையல்லாத சொத்துக்கள் அப்பெறுமானத்தால் கூடுதலாக மற்றும் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆதன பொறிகள் மற்றும் உபகரண பெறுமானத் தேய்வினை சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | வருடாந்த பெறுமானத் தேய்வு செலவினத்தை சரியாக கணக்கிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் 207.363 ஹெக்டயார் ஆன் 03 காணித் துண்டுகளின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்காத காரணத்தால் நடைமுறையல்லாத சொத்துக்கள் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சியம்பலான்டுவ, தெனியாய, எனசல்வத்த மற்றும் கந்தளாய் ஆகிய உப நிலையங்களின் உரிமையை நேரடியாக ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படாததால் மற்றும் வழக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் இந்த காணிகளின் பெறுமதியை கணக்கிட்டு கணக்கீடு செய்ய இயலாதுள்ளதென. | காணிகளின் பயன்பாட்டு உரிமையை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | கிரயம் ரூபா 6,207,600 ஆன கள உபகரணங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் மீளாய்வாண்டில் மோடார் வண்டியாக இனங்கண்டு குறித்த கிரயத்தை கணக்குகளிடையே மாற்றியிருந்த போதும் அந்த சொத்துக்களிற்குரிய திரண்ட பெறுமானத் தேய்வு பெறுமதியை கணக்குகளிகு இடையே மாற்றியிருக்கவில்லை. | மோடார் வண்டி திரண்ட பெறுமானத் தேய்வு கணக்கிலிருந்து மாற்றி சீராக்க நடவடிக்கை எடுப்பதென. | சொத்துக்களிற்குரிய சரியான திரண்ட பெறுமானத் தேய்வினை கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.5.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டுவரும் செலவிற்காக பொது திறைசேரியினால் விநியோகிக்கப்படும் நிதியத்தை பயன்படுத்தி நிறுவனத்தினால் மருத்துவ உதவி காப்புறுதி உத்தேசத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி இருந்ததுடன் அதற்குப் பதிலாக தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் மூலம் காப்புறுதிக் காப்பை பெற்றுக் கொள்ள வேண்டுமென தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தினால் 2017 ஆண்டின் போது அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக கவனம் செலுத்தாது மீளாய்வாண்டில் திறைசேரி நிதியத்தை பயன்படுத்தி ரூபா 10,364,935 ஆன மருத்துவ உதவி படிகளை செலுத்தியிருந்தது. | கரும்பு பயிர்ச் செய்கை மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்கையில் களத்தில் ஊழியர்களிகு ஏற்படும் சுகாதார பிரச்சினைகள் தொடர்பாக சலுகை வழங்குவது இந்த மருத்துவ உதவி உத்தேச திட்டத்தை ஆரம்பிக்க காரணமாக இருந்துள்ளதுடன் தற்போது வேறு மாற்று காப்புறுதி செயன்முறையொன்றை பெற்றுக் கொள்வது தொடர்பாக ஆய்வு செய்து கொண்டிருப்பதென. | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மூலம் காப்புறுதி காப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | நிறுவன நிதியத்தை பயன்படுத்தி ஊழியர்களிற்கு வீடமைப்பு கடன் உத்தேச திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் 07 ஊழியர்களிடமிருந்து ரூபா 4,271,069 ஆன வீடமைப்பு கடன் அறவிட வேண்டிதாக காணப்பட்டது. மேலும் குறித்த வீடமைப்பு கடன் உத்தேச திட்டத்தை நடைமுறைப்படுத்த பெற்றுக் கொண்ட அங்கீகாரம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஊழியர் நலன்புரியின் கீழ் சுழற்ச்சி கணக்கொனறை (Revolving Account) பேணிக் கொள்வதன் மூலம் இந்த வீடமைப்பு கடன் உத்தேச திட்டத்தை நடைமுறைப்படுத்தி பேணிச் செல்வதுடன் அதனை அவ்வப் போது திருத்தி கட்டுப்பாட்டு சபை அங்கீகாரம் கிடைத்த பின்னர் நிறுவனத்தின் அலுவலக ஒழுங்கமைப்பு கோவையின் (MOP) பிரகாரம் செயற்படுத்தப்படுவதென. | முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொண்ட பின்னர் கடன் உத்தேச திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 சீனி உற்பத்தி நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய 02 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகள் வரை பழைய கடன் மீதி ரூபா 4,890,951 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 02 அரச நிறுவனங்களான, கந்தளாய் சீனி கம்பனியிடமிருந்து மற்றும் இலங்கை சீனி கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய கடனை அறவிடுவதற்காக அமைச்சு மட்டத்தில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருவதெென. | வெளி நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய தொகையை அறவிட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்காமைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணக்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி 107, 108, 371(2)(ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் வழங்குனர்களிற்கு ரூபா 2,968,668 ஆன முற்பணம் செலுத்தியிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2024 மார்ச் 12 திகதி அளவிலும் அவற்றிலிருந்து ரூபா 2,574,868 ஆன முற்பணம் தீர்க்கப்படவில்லை. | 2024 வருட ஆரம்பத்தில் விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதென. | குறித்த நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 757 (2) மற்றும் (4) | பொருட் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை | 2024.03.31 திகதியளவில் தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுவதென. | குறித்த நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) நிதிப் பிரமாணம் | தின ஓட்டக் குறிப்பு கணக்காய்வாளர் | கணக்காய்வாளர் நாயகத்திற்கு | குறித்த நிதிப் பிரமாணம் |

| | | | |
|---|---|---|---|
| 1646 | நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை | விரைவில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதென | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 49,180,086 பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 68,450,176 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 19,270,090 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு வருமானம் ரூபா 25,227,666 இனால் அதிகரித்திருந்ததுடன் செயற்பாட்டு செலவினம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 5,955,980 ஆக உயர்ந்தமை இந்த வளர்ச்சிக்கு காரணமாக இருந்தது.

### 2.2 முக்கிய வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

(அ) கடந்த ஆண்டில் ரூபா 262,530,000 ஆன அரச மூலதன மற்றும் மீண்டுவரும் மானியம் மீளாய்வாண்டின் போது ரூபா 286,096,000 தொகை வரை ரூபா 23,566,000 இனால் அதிகரித்திருந்தது.

(ஆ) கடந்த ஆண்டில் ரூபா 7,752,807 ஆன நிலையான வைப்பு வட்டி வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 11,998,812 வரை ரூபா 4,246,005 இனால் அதிகரித்திருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கந்தளாய் சீனி கைத்தொழிற்சாலையை ஆரம்பிக்கும் நோக்கில் அதற்கு தேவையான விதை கரும்புகளை வழங்குதல், பிரதேசத்திற்கு பொருத்தமான கரும்பு வகையை தெரிவு செய்வது உள்ளிட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்காக வசதிகளை வழங்கும் நோக்கில் 2011 ஆண்டில் கந்தளாய் சீனி கைத்தொழில் நிறுவனத்திற்கு சொந்தமான காணியிலிருந்து 400 ஏக்கர் அளவான காணி மற்றும் 13 கட்டிடங்கள் பெறப்பட்டிருந்தன. 27 பேர்களுடன் கூடிய ஆளணியினரை இணைத்து 2023 ஆண்டு வரை 12 ஆண்டுகளாக மீண்டுவரும் மற்றும் மூலதன செலவாக ரூபா 139 மில்லியன் செலவிட்டுள்ள போதும், கத்தளாய் சீனி கைத்தொழில் நிறுவனத்தை ஆரம்பிக்காத காரணத்தால் செய்யப்பட்ட செலவுகள் விளைவற்றதாக காணப்பட்டது. | வரிசை அமைச்சுடன் கலந்துரையாடி எழுத்துமூல ஆலோசனையை பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | கந்தளாய் உப நிலையத்தை நடாத்திச் செல்லும் தேவைப்பாடு தொடர்பாக மீண்டும் கவனத்திற் கொள்ளவும், அதன் சொத்துக்களிலிருந் து உரிய பயன்பாட்டை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 சந்தர்ப்பங்களில் களஞ்சியத்தினுள் காணப்பட்ட பெறுமதி ரூபா 456,373 ஆன 860 லீற்றர் கிலைபேசெட் பீப்பாக்களில் இருந்து கசிந்திருந்ததாக குறிப்பிட்டு அந்த அளவை இருப்பு புத்தகங்களிலிருந்து குறைக்கப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அந் நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | களஞ்சிய பொறுபாளரினால் பணிப்பாளர் / பி.நி.அ இன் கவனத்திற்கு அனுப்பி இருப்பு புத்தகங்களில் சீராக்கியுள்ளதுடன் அதற்காகன உண்மையாக பொறுப்புவாயந்த தரப்பினர் யாவர் என உறுதி செய்வது பிரச்சினையாகவுள்ளது. | குறித்த நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அலுவலக ஒழுங்கமைப்பு கோவை ஒன்றை (MOP) தயாரிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக அபிவிருத்தி (SLIDA) நிறுவனத்திற்கு ரூபா 217,383 தொகை முற்பணம் செலுத்தப்பட்டுள்ள போதும் மீளாய்வாண்டு இறுதி வரை அலுவலக ஒழுங்கமைப்பு கோவை தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | அலுவலக ஒழுங்கமைப்பு கோவை ஒன்றை (MOP) தயாரிப்பது இறுதிக் கட்டத்தில் இருப்பதுடன் இவ்வாண்டு பூர்த்தி செய்ய முடியுமாகும். | முற்பணத்தை தீர்க்க வேண்டும். |
| (ஆ) | பட்டதாரி பாடநெறியை மற்றும் ஏனைய தொழில் பரீட்சைகளை கற்பதற்காக 06 அலுவலர்களிற்கு 2023 ஆண்டு முதல் ரூபா 17,527,351 செலுத்தப்பட்டு இருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் அப்பாடநெறிகளின் காலம் முடிவடைந்திருந்த போதும் அலுவலர்களினால் குறித்த தகைமைகளை பூர்த்தி செய்து கொண்டதாக கணக்காய்விற்கு உறுதி செய்யப்படவில்லை. | இரண்டு அலுவலர்கள் பட்டதாரி பாடநெறியை பூர்த்தி செய்து பட்டமளிப்பு விழா நடாத்தும் வரை சான்றிதழை சமர்ப்பிக்க முடியாதுள்ளதுடன் ஏனையவர்கள் பாடநெறியை பூர்த்தி செய்யாதது தொடர்பில் நிறுவன கட்டுப்பாட்டு சபையை அறிவுறுத்தி கட்டுப்பாட்டு சபையினால் அவர்களிற்கு பாடநெறியை பூர்த்தி செய்ய இறுதி காலஎல்லை நியமித்துள்ளதென. | பட்டதாரி பாடநெறியை மற்றும் தொழில் பரீட்சைகளிற்கான கட்டணத்தை அரச நிதியத்திலிருந்து செலுத்த முன்னர் ஒழுங்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டில் அபிவிருத்தி நடவடிக்கைகளை பூர்த்தி செய்துள்ள SL03 983, SL03 1025 மற்றும் SL03 1077 ஆகிய கரும்பு வகைகளை விநியோகிப்பதற்காக மேற்கொள்ளப்படும் பாரிய ஆலை பரிசோதனையை (Large – Mill Test) மீளாய்வாண்டு இறுதி வரை மேற்கொண்டிருக்கவில்லை. | SL 03 0336 வகைக்காக 2023 ஆண்டில் பாரிய ஆலை பரிசோதனை (Large Mill Test) செய்ததுடன், SL 03 1025 வகை மற்றும் SL 03 1077 வகைகளுக்கு 2024 ஆண்டிலும் SL 03 983 வகைக்கு 2025 ஆண்டிலும் பாரிய ஆலை பரிசோதனை (Large Mill Test) செய்யப்படுவதென. | பாரிய ஆலை பரிசோதனை விரைவில் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தினால் 2012 ஆண்டில் அறிமுகப்படுத்தி இருந்த SL96128 கரும்பு வகையை இலங்கை கரும்பு பயிர் செய்கையாளர்கள் பெறும்பாலும் பயன்படுத்துவதுடன் அறிமுகம் செய்யும் போது அதன் சீனி திரட்டிக் கொள்ளும் சதவீத 8.2 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டளவில் அதன் சீனி திரட்டிக் கொள்ளும் சதவீதம் படிப்படியாக 6.5 ஆக குறைவடைந்துள்ளதுடன் சீனி உற்பத்தி மற்றும் எதநோல் உற்பத்தி முறையே 16 சதவீதத்தால் மற்றும் 38 சதவீதத்தால் குறைவடைந்துள்ள போதும் நிறுவனத்தினால் இந்த பிரச்சினையை இனங்கண்டு சரிசெய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சீனியை திரட்டிக் கொள்வது குறைவடைய பயிர்ச் செய்கை முகாமைத்துவ நடவடிக்கை பலவீனங்கள் காரணமாகவுள்ளதை போன்றே பரிந்துரைத்த பிரகாரம் முதிர்ந்த அறுவடையை பெற்றுக் கொள்ளல், உரிய காலத்தினுல் அறைப்பதனை போன்றே கைத்தொழில் நிறுவனத்தினுள் உயர்ந்த சீனி உற்பத்தி வினைத்திறனை பேணிக் கொள்வது தொடர்பில் குறித்த தரப்பினரை அறிவூட்டி தற்போது நிலைமையை சீர்செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த இனங்காணப்பட்ட குறைகள் மற்றும் சீனி அறுவடை தொடர்பான பரிந்துரை உள்ளிட்ட அறிக்கையொன்றை 2023 ஆண்டில் பெறுத்தோட்ட அமைச்சின் ஊடாக சீனி கைத்தொழிற்சாலைகளிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டதென. | மேம்படுத்திய கரும்பு வகைகளை அறிமுகம் செய்வது தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டும். |
| (இ) | நிறுவனத்தினால் மீளாய்வாண்டில் உற்பத்தி நடவடிக்கைகளை பூர்த்தி செய்திருந்த ஓர் பசளை பயிர் போசாக்கு உற்பத்தி மற்றும் 05 பீடைகொல்லி உற்பத்திகளிற்காக பேடன்ட் அனுமதிப்பத்தரத்தை பெற்றுக் கொள்ள நடடிக்கை எடுத்திருக்கவில்லை. | உற்பத்தி துறை பரீட்சித்து பார்த்தலை பூர்த்தி செய்த பின்னர் பேடன்ட் அனுமதி பத்திரத்திற்காக விண்ணப்பிக்கப்படும். | பேடன்ட் அனுமதிப்பத்தரத்தை பெற்றுக் கொள்ள நடடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 சர்ச்சைக்குறிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 48 அலுவலர்களிற்கு மாதாந்த வாடகை அறவிடாது வழங்கியிருந்த உத்தியோகபூர்வ இல்லங்களிற்காக மீளாய்வாண்டினுள் மின் கட்டணமாக நிறுவனத்தினால் ரூபா 2,034,663 செலவிடப்பட்டிருந்தது. | 1981 இன் 75 இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட இந்த நிறுவனம் தொலை பிரதேசம் ஒன்றில் அமைந்துள்ளதால் ஊழியர்களை ஆட்சேர்ப்பதனையும், அவர்களை நிறுத்தி வைத்துக் கொள்வதனையும் நோக்காகக் கொண்டு அதனை துவக்கத்திலே இச் சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளவாறு ஊழியர் நலன்புரியின் கீழ் உத்தியோக பூர்வ இல்லங்களிற்கு குடிப்பதற்கு மாத்திரம் நீர் வழங்கல் சபை 4 அலவு நீரை மாத்திரம் வழங்க நடவடிக்கை எடுப்பதுடன் எல்லையை மீறி பயன்படுத்துவதாயின் அதனை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்களிற்கு உரியவாறு இல்ல வாடகை அறவிட வேண்டும். உத்தியோக பூர்வ இல்லங்களின் மின் கட்டணம் மற்றும் நீர் கட்டணம் உரிய அலுவலர்களினால் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | அலுவகத்தின் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களின் நீர் கட்டணமாக மீளாய்வாண்டில் நிறுவனத்தினால் ரூபா 312,674 தொகை செலவிடப்பட்டிருந்தது. உத்தியோகபூர்வ இல்லங்களிற்காக நீர் மாணிகள் பொருத்தி இருக்காததால் உத்தியோகபூர்வ இல்லங்களின் நீர் பாவனை அலகுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 1981 இன் 75 இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட இந்த நிறுவனம் தொலை பிரதேசம் ஒன்றில் அமைந்துள்ளதால் ஊழியர்களை ஆட்சேர்ப்பதையும், அவர்களை நிறுத்தி வைத்துக் கொள்வதையும் நோக்காக் கொண்டு அதன் ஆரம்பத்திலே இந்த சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளவாறு ஊழியர் நலன்புரியின் கீழ் உத்தியோக பூர்வ இல்லங்களிற்கு குடிப்பதற்கு மாத்திரம் நீர் வழங்கல் சபை 4 அலவு நீரை மாத்திரம் வழங்க நடவடிக்கை எடுப்பதுடன் எல்லையை மீறி பயன்படுத்துவதாயின் அதனை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | உத்தியோகபூர்வ இல்லங்களிற்கு வேறாக நீர் மாணிகள் பொருத்தப்பட வேண்டும். நீர் கட்டணம் உரிய அலுவலர்களினால் செலுத்தப்பட வேண்டும். |

**3.6 நிதிய குறை பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தினால் மக்கள் வங்கியில் மற்றும் தேசிய சேமிப்பு வங்கயில் பேணிச் செல்லும் 02 நடைமுறைக் | பொது திறைசேரியில் இருந்து கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நிதி கிடைப்பது | நடைமுறைக் கணக்குகளில் காணப்படும் |

| | | |
|---|---|---|
| கணக்குகளில் கடந்த 04 ஆண்டுகளின் சாதாரண மீதி ரூபா 5,453,758 ஆகக் காணப்பட்டதுடன் அம் மேலதிக நிதியை வருமானம் ஈட்டிக் கொள்ளக் கூடிய வழிகளில் முதலீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | தாமதமாகும் போது அல்லது நிதி குறைவாக கிடைக்கும் சந்தர்ப்பங்களில் இந்த கணக்குகளிலுள்ள நிதியை பயன்படுத்துவதால் முதலீட்டு நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தப்படவில்லை. எனினும் எதிர்காலத்தில் முறையான அங்கீகாத்துடன் வருமானம் ஈட்டிக் கொள்ளக் கூடிய வழிகளில் முதலீடு செய்யும் இயலுமையை கண்டறிந்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | மேலதிக நிதியை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

**3.7 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) மதிப்பீடு தயாரித்தல்** | | |
| 2019 ஆண்டு முதல் 30 நிர்மாண கைத்தொழில்களிற்கு 03 வெளி நபர்கள் மற்றும் ஒரு நிறுவனத்தின் ஊடாக ரூபா 68,636,070 ஆன மதிப்பீடு தயாரித்திருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அதவானிக்கப்படுகின்றன. | | |
| (i) 10 நிர்மாண வேலைகளிற்கு ரூபா 34,931,153 ஆன மதிப்பீடு தயாரித்திருந்ததுடன் மதிப்பீடு தயாரிக்கும் ஒப்பந்த நிர்வாக கட்டணமாக ரூபா 1,471,122 தொகை மஹவெலி அதிகார சபையின் பிரதி தங்குமிட கருத்திட்ட முகாமையாளர் (பொறியில்) ஒருவரின் தனிப்பட்ட கணக்கிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | 10 நிர்மாண வேலைகளிற்கு இலங்கை மஹவெலி அதிகார சபையின் மூலம் பொறியில் சேவையை கோரியுள்ளதுடன் அதற்காக கோரியுள்ள சேவைக் கட்டணத்தை செலுத்தும் போது இலங்கை மஹவெலி அதிகார சபை பிரதான பொறியியலாளரின் 2020/08/28 திகதிய கோரிக்கை கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு காசோலையை வழங்க பெயர் மற்றும் கணக்கு இலக்கம் வழங்கியுள்ளதுடன் அதன் பிரகாரம் கொடுப்னவு செய்யப்பட்டுள்ளதென. | தனியார் நிறுவனம் ஒன்றிற்கு செலுத்தியுள்ள தொகையை மீண்டும் அறவிட வேண்டும். |
| (ii) வலவ பிரதி தங்குமிட கருத்திட்ட முகாமையாளர் (பொறியில்) இனால் மஹவெலி அதிகார சபையின் கடிதத் தலைபை பயன்படுத்தி 02 நிர்மாண வேலைகளிற்கு 2021 ஆண்டில் தயாரித்திருந்த ரூபா 24,411,265 ஆன | 2021 ஆண்டில் தெனியாயவில் பழைய வேலி திருத்தம் மற்றும் பாதை அபிவிருத்தி மற்றும் தெனியாய உப நிலையத்தில் மதில் மற்றும் வலை வேலி நிர்மாணிப்பதற்காக இலங்கை மஹவெலி அதிகார சபையின் பொறியியலாளரினால் வழங்கிய | அங்கீகாரமின்றி தனிப்பட்ட கணக்கிற்கு செலுத்தியுள்ள அரச நிதியை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடுகளிற்கு உரிய வேலைப் பகுதிகள் கணக்காய்வு திகதிய 2024 மார்ச் 13 திகதி வரையிலும் ஆரம்பித்திருக்காத போதும் மதிப்பீடு தயாரிக்கும் கட்டணமாக ரூபா 976,425 தொதை அந்த அலுவலரின் தனிப்பட்ட கணக்கிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீட்டிற்கு உரியதாக நிர்மாணம் மேற்கொள்ள போதிய பாதீட்டு ஏற்பாடு இல்லாததால் பல கட்டங்களாக அப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டதுடன் இதற்காக கொள்வனவு செய்த பொருட்களை பயன்படுத்தி 2024 ஆண்டில் ஒரு பகுதியை மற்றும் எதிர்வரும் ஆண்டுகளில் எஞ்சிய பகுதிகளிற்குரிய நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதென. | |
| (iii) | கணக்காய்வு திகதிய 2024 மார்ச் 13 திகதி வரை பணிகளை ஆரம்பிக்காத மேலே 1 மற்றும் 2 இல் குறிப்பிடப்படும் 02 வேலைகளிற்கு உரியதாக ரூபா 976,425 மதிப்பீடு தயாரிக்கும் கட்டணத்தை செலுத்த 2021 ஒக்டோபர் 15 திகதி பிராந்திய பெறுகைகள் குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் கணக்காய்வு திகதிய 2024 மார்ச் 13 திகதி வரை பெறுகைகள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்காத இந்த நிர்மாண வேலைகளிற்கு மதிப்பீடு தயாரிக்கும் கட்டணமாக வெளி நபர் ஒருவரிற்கு ரூபா 976,425 தொகையை செலுத்த பிராந்திய பெறுகைகள் குழு அங்கீகரித்துள்ளதால் குழுவினால் அதிகாரத்தை விஞ்சி நடவடிக்கை எடுத்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. | தெனியாய பழைய வேலி மற்றும் தெனியாய வலை வேலி மற்றும் மதில் அபிவிருத்திக்காக அரச நிறுவனமொன்றான இலங்கை மஹவெலி அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் ஒருவரிடமிருந்து மதிப்பீடொன்றை பெற்றுக் கொள்ள முக்கிய காரணமாக அமைந்தது முன்னர் நிலவிய பொறியியல் மதிப்பீடுகளில் காணப்பட்ட பலவீனங்கள் காரணமாக அந்த பலவீனங்களை குறைத்துக் கொள்ளும் நோக்கத்தில் அவ்வாறே அதற்காக செலவாகும் பயனற்ற செலவுகளை குறைத்துக் கொள்வதற்காகும். அதனால் பொறியியல் சேவைக்காக செலுத்த இயலுமான அங்கீகார விகிதத்தின் மீது (5% உச்சம்) கொடுப்பனவு செய்ய பிராந்திய பெறுகைகள் குழு பரிந்துரை வழங்கியுள்ளதால் குழுவினால் அதிகாரத்தை விஞ்சி நடவடிக்கை எடுக்கவில்லையென. | அதிகாரத்தை விஞ்சி செயற்பட்டுள்ள அலுவலர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 20 நிர்மாண வேலைகளிற்கு இரண்டு வெளி நபர்கள் மற்றும் நிறுவனமொன்றிடம் இருந்து ரூபா 33,704,917 ஆன மதிப்பீட்டை தயாரித்துக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கும் கட்டணமாக ரூபா 621,456 செலுத்தப்பட்டிருந்ததுடன் அக் கட்டணத்தை செலுத்திய அடிப்படை மற்றும் | கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள சேவை வழங்குனர்கள் ஆகையால் அவர்களிடமிருந்து நேரடியாக பொறியியல் சேவையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறே முன்னர் பொறியியல் மற்றும் தொழிநுட்ப அலுவலர்களின் மதிப்பீடுகளில் | முறையான அங்கீகாரமின்றி தனிப்பட்ட நபர்களிற்கு மற்றும் நிறுவனங்களிற்கு செலுத்தியுள்ள நிதியை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணத்திற்கான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | காணப்பட்ட பலவீனங்கள் காரணமாக, அரச நிறுவனமொன்றான இலங்கை மஹவெலி அதிகார சபையின் பிரதான பொறியியலாளரின் உதவியை பெற்றுக் கொள்ள நிறுவனம் நடவடிக்கை எடுத்ததுடன் அதற்காக பிராந்திய பெறுகைகள் குழுவின் பரிந்துரை பெறப்பட்டுள்ளதென. | |
| (v) | 20 நிர்மாண வேலைகளிற்கு 03 வெளி நபர்கள் மற்றும் நிறுவனமொன்றினால் ரூபா 33,371,917 ஆன மதிப்பீட்டை தயாரித்திக்கும் போது தேவையான பிரமாண பத்திரத்தை தயாரித்து இருக்காததால் தயாரத்திருந்த மதிப்பீடுகளில் சரியான தன்மை கணக்காய்விற்கு உறுதியாகவில்லை. | நிறுவனத்தினால் மதிப்பீடு மற்றும் திட்டத்தை வெளி பொறியியலாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் பிரமாணப் பத்திரங்கள் வெவ்வேறாக வெற்றுக் கொள்ளப்படவில்லை. ஏதிர்வரும் ஒப்பந்தங்களில் பிரமாண பத்திரத்தை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதென. | பிரமாண பத்திரங்களை தயாரித்து அதன் பிரகாரம் சரியாக நிர்மாண மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும். |
| **(ஆ)** | **தெனியாய கரும்பு விதை இனவிருத்தி நிலைய பிரவேச பாதை, தடுப்புச் சுவர் மற்றும் நுழைவினை நிர்மாணித்தல்** | | |
| | 15 வேலை விடயங்களை உள்ளடக்கி ரூபா 1,285,930 ஆன மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீடு தயாரிக்கும் கட்டணமாக வெளி நபர் ஒருவரிற்கு ரூபா 19,289 செலுத்தப்பட்டிருந்தது. இது தொர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உட்படுத்தியிருக்காத 09 வேலை விடயங்கள் மேற் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது ஒப்பந்ததாரருக்கு ரூபா 1,041,165 செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் தேவைப்பாட்டின் மீது இவ் ஒப்பந்தத்தின் வேலை அளவின் மாற்றம் மற்றும் புதிதாக வேலைப் பகுதிகள் சேர்க்கப்படதனால் அப்போது இருந்த பணிப்பாளரின் ஆலோசனை பிரகாரம் வெளி பொறியியல் மதிப்பீடொன்றை பெற்று அதனை அங்கீகரித்து அது தொடர்பாக பெறுத்தோட்ட கைத்தொழில் அமைச்சையும் அறிவூட்டி, நிறுவன கட்டுப்பாட்டு சபை அங்கீகரத்தின் பின்னர் 2023 ஆண்டின் போது இக் கொடுப்பனவு செய்யப்பட்டதென. | உரிய அங்கீகாரமின்றி மேற்கொண்டுள்ள கொடுப்பனவு தொடர்பாக பொறுப்புவாய்ந்த அலுவலர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மேற்கொள்ளப்பட்ட உண்மையான வேலைகளின் அளவை விடவும் கூடுதலான அளவிற்கு செலுத்தப்பட்டிருந்த காரணத்தால் மூன்று சந்தர்ப்பங்களில் ரூபா 163,598 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | அளவை பத்திர பரீட்சிப்பின் போது அங்கு கணக்கிடல் வழு காரணமாக 0.3 மீற்றரிற்கு பதிலாக 3.0 மீற்றர் என அச்சிடப்பட்டுள்ளதுடன் பிரதான கட்டிடத்தின் முன்பக்கமாக அமைத்திருந்த பிரதான தடுப்புச் சுவரின் வலது பக்கப் பகுதியில், அளவை வழுவினால் 2.19 மீற்றர்களும் இடது பக்கப் பகுதியில், அளவை பத்திர பரீட்சிப்பின் போது அங்கு அளவை வழுவினால் 1.88 மீற்றரிற்கு பதிலாகவும் கூடுதலாக செலுத்தியுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்காக கூடுதலாக செலுத்தியுள்ள ரூபா 163,598 தொகையை ஒப்பந்ததாரரின் நிறுத்தல் பணத்திலிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதென. | கூடுதலாக செலுத்தியுள்ள தொகையை அறவிட வேண்டும். |
| (iii) | உரிய அங்கீகார விலைகளை பயன்படுத்தாது இரண்டு வேலை விடயங்களிற்குரியதாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ள காரணத்தால் ரூபா 263,603 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | வேளி பொறியியலாளர் ஒருவரினால் தொழிநுட்ப விடயங்களை கவனத்திற் கொண்டு வழங்கியுள்ள விகிதங்களை (Rates) அடிப்படையாகக் கொண்டு, கருங்கல் மதிலிற்காக பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் குறித்த பணிக்காக கொடுப்பனவு செய்ததென. | கூடுதலாக செலுத்தியுள்ள தொகையை மீள் அறவீடு செய்ய வேண்டும். |
| (iv) | ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் 2019 திசெம்பர் 10 திகதிக்கு முன்னர் நிர்மாண பணிகளை பூர்த்தி செய்ய வேண்டிய போதும், உண்மையாக வேலை முடிவுறுத்தப்பட்ட திகதி 2020 ஏப்ரல் 10 ஆனதில் 122 நாட்கள் அங்கீகரிக்கப்படாத தாமத காலமொன்று காணப்பட்டது. மேலதிக ஒப்பந்த காலத்திற்காக தாமதக் கட்டணம் அறவிடுவதற்கான ஏற்பாடுகள் ஒப்பந்தத்திற்கு உட்படுத்தியிருக்கவில்லை. | தெனியாய உப நிலையத்தின் பிரவேச பாதையின் பக்க மதிலை நிர்மாணத்திற்காக வழங்கிய ஒப்பந்தத்திற்கு உரிய நிர்மாணத்தை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அதிக மழை நிலவிய காரணத்தால் அந்த நிர்மாணம் தாமதமானது. தாமதக் காலத்திற்கு கட்டணம் அறிவிடும் விதம் பற்றி ஒப்பந்த உடன்படிக்கையிற்கு உட்படுத்தி இருக்காததுடன் எதிர் காலத்தில் ஒப்பந்த உடன்படிக்கைக்கு தாமதக் கட்டணம் அறவிடுவது தொடர்பான நிபந்தனைகளை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதக் கட்டணம் அறவிடுவது தொடர்பான ஏற்பாடுகளை உடன்படிக்கையில் உட்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | நிர்மாணத்திற்குரிய ரூபா 60,048 ஆன செயலாற்றுகை பிணைமுறி 2020 பெப்ரவரி 01 திகதியுடன் காலாவதியாகி இருந்த போதும் நிர்மாணத்தை பூர்த்தி செய்ய செலவிடப்பட்ட மேலதிக காலத்திற்கு நேரொத்ததாக செயலாற்றுகை பிணைமுறியின் காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 60,048 ஆன செயலாற்றுகை பிணைமுறி 2020 பெப்ரவரி 01 திகதி காலாவதியாகி உள்ளதாக கணக்காய்விற்கு அதவானிக்கப்பட்டது. பொதுவாக அவ்வாறான நடவடிக்கைகளை சரியாக மேற்கொள்கின்ற போதும் எழுமாறாக இடம்பெறும் இவ்வாறான கைத்தவறுகளையும் தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | பொறுப்புவாய்ந்த அலுவலர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு கரும்பு பயிர்ச் செய்கையின் உயர் வர்த்தக ரீதியான வகைகளை முன்னேற்றுதல் மற்றும் அதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக நிறுவப்பட்டுள்ள கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்கு அத்தியவசிமான முக்கிய பதவியான பிரதி பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம்) பதவி 2020 ஆண்டு முதலும் பிரதான தொழில்நுட்ப பரிமாற்ற அலுவலர் பதவி மற்றும் 05 பிரதான ஆராய்ச்சி அலுவலர் பதவிகள் அப் பதவிகள் உறுவாக்கப்பட்ட திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டன. மேலும் 2013 ஆண்டு முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை சிரேஷ்ட தொழிநுட்ப பரிமாற்ற அலுவலர் மற்றும் ஆராய்ச்சி அலுவலர் 06 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | 2024.01.29 திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அமைச்சிற்கு கோரிக்கை சமர்பித்துள்ள்ளதுடன் அதனை அமைச்சினால் 2024.03.02 திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. பிரதான ஆராய்ச்சி அலுவலர் பதவி மற்றும் பிரதான தொழில்நுட்ப பரிமாற்ற அலுவலர் பதவிக்காக பல சந்தர்ப்பங்களில் பத்திரிகை அறவித்தல் மூலம் விண்ணப்பம் கோரியதுடன் தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவில்லையென. | வெற்றிடத்தை நிரப்ப வேண்டும். |